இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் நிதிகூற்றுக்களைத் தயாரித்தல்.

Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

இலங்கைக் கணக்கீட்டு நியமம்—01இன் நோக்கம்

நிறுவனத்தின் நிதிகூற்றுக்களை கடந்த கால நிதிக்கூற்றுக்களுடனும் ஏனைய நிறுவனங்களின் நிதிகூற்றுக்களுடனும் ஒப்பிடத்தக்க வகையில் நிதிக்கூற்றுக்களை சமர்பிக்கும் போது கருத்தில் கொள்ளவேண்டிய அம்சங்களை வழங்குகின்றது.

நிதிக்கூற்றுக்கள்

நிறுவனம் ஒன்றின் நிதிநிலமை , நிதிப்பெறுபேறு என்பவற்றை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் வெளிப்படுத்தும் கூற்றுக்கள் நிதிக்கூற்றுக்கள் எனப்படும்.

நிதிக்கூற்றுக்களின் ஆக்கக்கூறுகள்

1. நிதிநிலமைக் கூற்று
2. இலாபம் அல்லது நட்டம் மற்றும் முற்றுமடங்கிய வருமானக்கூற்று
3. உரிமையாண்மை அசைவுக்கூற்று
4. காசுப்பாய்ச்சல் கூற்று
5. குறிப்புக்கள் :- பிரதான கணக்கீட்டுக் கொள்கைகளும் எனைய விபரமான தகவல்களும்

நிதிக்கூற்றுக்களின் நோக்கங்கள்/ தேவைகள்

நிதிக்கூற்றுக்களைப்பயன்படுத்தும் தரப்பினர் பொருளாதாரர் தீர்மானங்களை பரந்த அடிப்படையில் மேற்கொள்வதற்காக நிறுவனத்தின் நிதிநிலமை, நிதிச் செயற்பாடு, காசுப்பாச்சல் தொடர்பான தகவல்களை வழங்குதல்

நிதிக்கூற்றுக்களின் பொதுவான இயல்புகள்

1. நியாயமானதும் நியமங்களுக்கு அமைவாகவும் தயாரித்து வழங்குதல்.
2. நிதிநிலமை , நிதிச்செயற்பாடு , காசுப்பாய்ச்சல் போன்ற தகவல்களை உள்ளடக்குதல்.
3. குறித்த நியமம் பின்பற்றாமையால் உண்மைத்தன்மை பிரதிபலிக்கும் என
4. முகாமையாளர்கள் கருதினால் அது தொடர்பாக குறிப்பில் வெளிப்படுத்தல்
5. தவறான கொள்கைகளை பின்பற்றி அதை குறிப்பில் வெளிப்படுத்த முடியாது.

நிதிக்கூற்றுக்கான பொறுப்பு

1. சமர்ப்பித்தல் — இயக்குனர் சபை
2. கையொப்பமிடல்—இயக்குனர்கள்/ அங்கத்தவர்கள்

நிதி அறிக்கையை தயார் செய்வதில் பின்பற்றுகின்ற எடுகோள்

1. நிதி அறிக்கை தயாரிக்கும் போது அந்நிறுவனம் தொடர்ந்து இயங்கும் தன்மை தொடர்பாக மதிப்பீடு செய்து அதன் பிரகாரம் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்க வேண்டும்.

   மாறாக மதிப்பீட்டில் தொடர்ந்து இயங்கும் தன்மை இழந்து விட்டால் , நிதிக்கூற்றுக்கள் இவ் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கவில்லை என்பதனை காரணத்துடன் குறிப்பு வடிவில் வெளிப்படுத்த வேண்டும்.

தொடர்ந்து இயங்கும் தன்மை தொடர்பான மதிப்பீட்டில் கருத்தில் கொள்கின்ற விடயங்கள்

1. நிறுவனத்தின் உற்பத்தி , விநியோகம் தொடர்பான சந்தை நிலவரம்.
2. கடந்த காலம் உழைக்கப்பட்ட இலாபமும் எதிர்காலத்தில் எதிர்பாக்கப்படுகின்ற இலாபமும்.
3. கடனை திருப்பிச் செலுத்துவதற்கான வழிமுறைகள்
4. நிதி நிறுவனங்களுடன் கொண்டுள்ள உறவு

நிதி அறிக்கைகள் தயார் செய்வதில் பின்பற்றுகின்ற ஏனைய விடயங்கள்

1. **அட்டுறு அடிப்படையிலான கணக்கீடு**

   நிறுவனம் ஒன்றின் காசுப்பாய்ச்சல் கூற்று த்விர்ந்த எனைய நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயார் செய்ய வேண்டும்.

   வருமானம் எப்போது பெறப்பட்டது என்பதைவிட அது எப்போது உழைக்கப்பட்டதோ அப்போதே வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும் அது போல் செலவுகள் எப்போது கொடுப்பனவு செய்யப்பட்டது என்பதை விட அது எப்போது ஏற்பட்டதோ அப்போதே செலவாக கருதப்படும் என்பதைக் குறிக்கின்றது.

2. **நிதிக்கூற்றுக்களை தயாரித்து வழங்கலில் மாறாத்தன்மை**

நிதிக்கூற்று தயாரித்து வழங்கப்படும் முறையில் ஒவ்வொரு காலப்பகுதியிலும் சீரான தன்மையைக் கடைப்பிடித்தல் வேண்டும். இருப்பினும் பின்வரும் இரண்டு சந்தர்பங்களில் மாத்திரம் மாற்றங்கள் மேற்கொள்ள முடியும்.

1. வணிகத் தொழிற்பாட்டு இயல்பு மாற்றமடையும் போது அல்லது மாற்றம் அவசியம் எனக் கருதப்படும் போது
2. கணக்கீட்டு நியமத்தின் வேண்டுகோளாக இருப்பின்

3. பொருண்மையும் ஒன்று சேர்த்தலும்

முக்கியத்துவம் வாய்ந்த ஒவ்வொரு விடயமும் நிதிக்கூற்றில் தனித்தனியாக காட்டப்படல் வேண்டும்.

பொருண்மையற்ற முக்கியத்துவமற்ற விடயங்களை மொத்தமாக காட்ட முடியும். நடவடிக்கைகளை அவற்றின் தொழிற்பாட்டின் அடிப்படையில் அல்லது அதன் இயல்பின் அடிப்படையில் பாகுபடுத்திக் காட்ட முடியும்.

உதாரணம் : தொழிற்பாட்டின் அடிப்படையில்

4. எதிரீடு செய்தல்

இலங்கை கணக்கீட்டு நியமம் அனுமதிக்கப்பட்டிருந்தால் அன்றி சொத்துக்களும் , பொறுப்புக்களும் மற்றும் வருமானங்களும் செலவுகளும் எதிரீடு செய்யப்பட மாட்டாது. பின்வரும் சந்தர்பங்களில் எதிரீடு செய்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

1. **நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோரின் விளங்கிக் கொள்ளும் ஆற்றலைக் குறைக்குமாயின்,**
2. **எதிர்கால காசுப்பாய்ச்சலினை மதிப்பிடுவதை தடுக்குமாயின்**
3. **சொத்துக்களின் தேறக்கூடிய பெறுமதியை அளவீடு செய்வதற்கு முடியாதிருக்கும் போது.**

உதாரணம் :- கடன்பட்டோர் மீதியும் ஐயக்கடன் ஏற்பாட்டு மீதியும் எதிரீடு செய்ய முடியாது.எதிரீடு செய்வதால் பொருண்மைத் தன்மை பிரதிபலிக்குமாயின் அதனை எதிரீடு செய்யலாம்.

உதாரணம் :- நடைமுறை அல்லாச் சொத்து ஒன்று விற்றுப் பெற்ற காசிலிருந்து விற்பனைச் செலவை எதிரீடு செய்தல்.

5. ஒப்பீட்டுத் தகவல்கள்.

நிதி அறிக்கைகளில் வெளியிடப்படும் சகல பெறுமதிகளுக்குமான முன்னைய காலத் தொடர்பான ஒப்பீட்டுத் தகவல்கள் வெளிக்காட்டப்படல் வேண்டும்.

6. அறிக்கையிடலுக்கான காலம்

வணிக நிறுவனம் ஒன்றின் நிதிக்கூற்றுக்கள் ஒவ்வொரு வருடமும் (12 மாதங்களுக்கு ஒரு தடவை) தயாரித்து வழங்கப்படல் வேண்டும்.
அறிக்கையிடும் காலப்பகுதி ஒருவருடத்திற்கு குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ நிச்சயிக்கப்படும் போது அதற்கான காரணம் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.
2007 ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் படி கம்பனியினது அறிக்கையில் காலத்தை மாற்றுமாயின் கம்பனிப் பதிவாளர் அனுமதி பெறப்படல் வேண்டும். அத்துடன் இரண்டு ஐந்தொகைத் திகதிகளுக்கிடையில் 15 மாதங்களுக்கு அதிகமாக இருத்தல் கூடாது.

நிதிக்கூற்றுக்களை இனங்காண்பதற்கு வெளிப்படுத்தப்படும் தகவல்கள்

1. ஒரு நிறுவனத்தின் பெயர்
2. ஒரு நிறுவனத்திற்கானதா அல்லது வணிகங்களின் குழுமத்தினையும் அடக்குகிறதா
3. அறிக்கையின் காலமும் , இறுதித் திகதியும்
4. பயன்படுத்திய நாணய அலகு
5. தொகைகளை வெளிப்படுத்துவதற்கு உபயோகிக்கப்பட்ட கிட்டிய பெறுமதி மட்டங்கள்

நிதி நிலமைக்கூற்றில் வெளிப்படுத்த வேண்டிய ஆகக் குறைந்த தகவல்கள்

1. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்
2. முதலீட்டு ஆவணங்கள்
3. அருவகச் சொத்துக்கள்
4. நிதிச் சொத்துக்கள்
5. முதலீடுகள்
6. இருப்புக்கள்
7. வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்
8. காசும் காசுக்கு சமனானவை
9. செலுத்த வேண்டியவை
10. ஏற்பாடுகள்
11. நிதிப் பொறுப்புக்கள்
12. பிற்போடப்பட்ட வரி
13. பொறுப்புக்கள்
14. மூலதனமும் ஒதுக்கங்களும்
15. சொத்துக்களின் இயல்பும், திரவத்தன்மையும்
16. நிறுவனத்திற்குள் சொத்துக்களின் தொழிற்பாடு

நடைமுறை / நடைமுறை சாராத வேறுபாடுகள்

நிதி அறிக்கைகளில் சொத்துக்கள் நடைமுறையில்லாத சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள் எனவும் , பொறுப்புக்கான நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் நடைமுறைப் பொறுப்புக்கள் எனவும் திரவத்தன்மை ஒழுங்கில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

நடைமுறையல்லாதவை

ஐந்தொகைத் திகதிக்கு பின்னர் 12 மாதங்களை அதிகரித்த காலத்தில் அறவீடு செய்யப்படும் ,தீர்க்கப்படும் என எதிர்பாக்கப்படும் உருப்படிகள்.

நடைமுறையானவை

ஐந்தொகைத் திகதிக்கு பின்னர் 12 மாதங்களை அதிகரித்திராத காலத்திற்குள் அறவீடு செய்யப்படும் , தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படும் உருப்படிகள்.

நடைமுறைச் சொத்துக்கள்

பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் சொத்துக்கள் நடைமுறைச் சொத்துக்கள் எனவும் அவை தவிர்ந்தவை நடைமுறை அல்லாச் சொத்துக்கள் எனவும் பாகுபடுத்தப்படுகின்றது.

1. விற்பனை செய்ய வைத்திருப்பவை
2. ஐந்தொகைத் திகதிக்கு பின்னர் 12 மாதங்களுக்குள் தேறும் என எதிர்பார்ப்பவை
3. LKAS –7 இன் பிரகாரம் காசும் காசுக்கு சமனாவை என்ற வரைவிலக்கணத்திற்குள் அடங்குபவை
4. சாதரண வியாபாரச்சுற்றோட்டத்தில் தேறும் என எதிர்பார்ப்பவை.

நடைமுறைப் பொறுப்புக்கள்

பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு நிபந்தனையை பூர்த்தி செய்பவை நடைமுறைப் பொறுப்புக்கள் எனவும் இவை தவிர்ந்தவை நடைமுறை அல்லாப் பொறுப்புக்களாகவும் காணப்படும்.

1. பிரதான விற்பனை நோக்கத்திலிருந்து உருவாகிய பொறுப்புக்கள்
2. வணிகத்தின் சாதாரண தொழிற்பாட்டுச் சங்க காலத்திற்குள் தீர்க்கப்படும் என எதிர்பாக்கப்படும் பொறுப்புக்கள்
3. ஐந்தொகைத் திகதிக்கு பின்னர் 12 மாதங்களுக்கு தீர்க்கப்படவேண்டிய பொறுப்புக்கள்
4. ஐந்தொகைத் திகதிக்கு பின்னர் பிற்போட்ட பொறுப்புக்கள் தொடர்பாக வரையறையற்ற உரிமையினைக் கொண்டிருக்கும் பொறுப்புக்கள்.

இலாபம் அல்லது நட்டம் மற்றும் முற்றுமடங்கிய வருமானக்கூற்று

குறித்த காலப்பகுதிக்கான அனைத்து வருமானங்களையும் செலவுகளையும் ஏற்பிசைவு செய்து காட்டுதல் வேண்டும். இது பின்வரும் இரு விடயங்களைக் கொண்டிருக்கும்.

1. இலாபம் அல்லது நட்டம்
2. ஏனைய முற்றுமடங்கிய வருமானம்

இலாபம் அல்லது நட்டம்

மொத்த வருமானத்திலிருந்து மொத்தச்செலவைக் கழிக்க வருவது இலாபம் அல்லது நட்டம் ஆகும். இது ஏனைய முற்றடக்கல் வருமானத்தை உள்ளடக்காது.

ஏனைய முற்றுமடக்கிய வருமானம் / எனைய பரந்தளவிலான வருமானம்

1. ஆதனப் பொறி உபகரணம் அருவச் சொத்துக்களின் மீள் மதிப்பீட்டு மிரையில் ஏற்பட்ட மாற்றம்.
2. தொழிலாளர்களுக்கான நலத்திட்ட இலாபங்கள் / நட்டங்கள்
3. வெளிநாட்டு நாணயமாற்று வீதத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் தாக்கங்கள்.
4. நிதிச் சொத்துக்களின் விற்பனைக்கான மீள் அளவீட்டில் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டம்.

மீள வகைப்படுத்தலுக்கான சீராக்கங்கள்

தற்போது அல்லது கடந்த காலங்களில் ஏனைய முற்றடக்கல் வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட விடயத்தினை மீள் பகுப்பாய்வு செய்வதனால் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டத்தைக் குறிக்கும்.

வருமானக் கூற்றின் முகப்பில் முன்னிலைப்படுத்தப்படும் தகவல்கள்

1. வருமானம்
2. விற்பனை கிரயம்
3. ஏனைய வருமானம்
4. விநியோகச் செலவு
5. நிர்வாகச் செலவு
6. ஏனைய செலவு
7. நிதிச் செலவு
8. வரிச் செலவு
9. ஆண்டுக்கான இலாபம்
10. ஏனைய முற்றுமடங்கிய வருமானம்

உரிமையாண்மை மாற்றக் கூற்றில் முன்னிலைப்படுத்தப்படும் தகவல்கள்.

1. ஆண்டுக்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம்
2. கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்கள், அடிப்படை வழுக்களின் திருத்தங்கள்
3. உரிமையாளர்களுக்கான மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள்
4. திரண்ட இலாபத்தில் ஆரம்ப , இறுதி மீதிகள்

நிதிக்கூற்றின் மாதிரி வடிவங்கள்

வரையறுத்த விநாயகர் கம்பனி 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றூமடங்கிய வருமானக்கூற்று

	குறிப்பு	தொகை (000)	தொகை (000)
விற்பனை/ வருமானம்			XXX
(+) விற்பனைகிரயம்			XXX
மொத்தலாபம்			XXXX
எனைய வருமானம்	01		XXX
(-) விநியோகக் கிரயம்		XXX	XXXX
நிர்வாகச் செலவுகள்		XXX	
எனைய செலவுகள்		XXX	
நிதிச் செலவுகள்		XXX	(XXXX)
வரிக்கு முன் இலாபம்	02		XXX
(-) ஆண்டுக்கான வருமான வரி	03		(XXX)
ஆண்டுக்கான இலாபம்			XXX
ஏனைய முற்றூமடங்கிய வருமானம்			
காணி மதிப்பீட்டு மிகை		XXX	
மோட்டார் மீள்மதிப்பீட்டு மிகை		XXX	XXX
மொத்த முற்றுமடங்கிய வருமானம்			XXXX

குறிப்பு 01

பிற தொழிற்பாட்டு வருமானம்	(ரூ 000)
நிலையான வைப்பு வட்டி	xxx
தளபாட விற்பனை இலாபம்	xxx
பெற்ற கழிவு	xxx
பெற்ற வாடகை	xxx

குறிப்பு 03

ஆண்டுக்கான வருமான வரி	(ரூ 000)
ஆண்டுக்கான வருமான வரி	xxx
+/- சென்ற ஆண்டுக்கான வரி சீராக்கம்	xxx

குறிப்பு—02

வரிக்கு முன் இலாபம் பின்வரும் செலவுகள் கழித்த பின்	(ரூ 000)
இயக்குனர் கட்டணம்	xxx
இருப்பு பெறுமதி வீழ்ச்சி நட்டம்	xxx
ஊழியர் சேமலாப நிதிச் செலவு	xxx
ஊழியர் நம்பிக்கை நிதிச் செலவு	xxx
இயந்திர மீள்மதிப்பீட்டு நட்டம்	xxx
குத்தகை வட்டி	xxx
விற்பனை உத்தரவாதம்	xxx
ஆதனம் பொறி உபகரணம் பெறுமானத்தேய்வு	xxx
கணக்காய்வுக் கட்டணம்	xxx

செய்கைகள்

01 விற்பனைக்கிரயம்	(ரூ 000)
ஆரம்ப இருப்பு	xxx
கொள்வனவு	xxx
	xxxx
(-) இறுதி இருப்பு	xxx
விற்பனைக்கிரயம்	xxx

ஏனைய செலவுகள் (ரூ 000)

இருப்பு பெறுமதி வீழ்ச்சி நட்டம்	XXX
மோட்டார் மீள் மதிப்பீட்டுக்குறை	XXX
களவு நட்டம்	XXX

02. விநியோகக் கிரயம் (ரூ 000)

விளம்பரம்	XXX
விற்பனைத்தரகு	XXX
வியாபார வருமதிகளின் மதிப்பு குறைவு நட்டங்கள்	XXX
வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்களுக்களுக்கான படிகள் ஏற்பாடு	XXX
மோட்டார் பெறுமானத்தேய்வு	XXX
விற்பனை உத்தரவாத ஏற்பாடு	XXX
கொடுத்த கழிவு	XXX
கொடுத்த தரகு	XXX

05. நிதிச் செலவுகள் (ரூ 000)

குத்தகை வட்டி	XXX
வங்கிக் கடன் வட்டி	XXX
தொகுதிக்கடன் வட்டி	XXX

03. நிர்வாகச் செலவுகள் (ரூ 000)

தொலைபேசிக்கட்டணம்	XXX
கட்டிட பெறுமானத்தேய்வு	XXX
தளபாடப் பெறுமானத் தேய்வு	XXX
வாடகை	XXX
சம்பளங்கள்	XXX
மின்சாரம்	XXX
காப்புறுதி	XXX
ஊழியர் சேமலாப காப்புறுதி	XXX
காப்புறுதிக் கட்டணம்	XXX

வரையறுத்த விநாயகர் கம்பனி 31.03.2016இல் முடிவுற்ற ஆண்டுக்காண உரிமையாண்மை மாற்றக் கூற்று

விபரம்	கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	பொது ஒதுக்கம்	நிறுத்தி வைத்த ஒதுக்கம்	மொத்தம்
01.04.2016 இல் மீதி	xxx	xxx	xxx	xxx	xxx
பங்கு வழங்கல்	xxx				xxx
ஒதுக்கங்கள் மூலதனமாக்கல்	xxx			(xxx)	
பொது ஒதுக்கத்துக்கு மாற்றல்			xxx	(xxx)	
மொத்த முற்றுமடங்கிய வருமானம்		xxx		xxx	xxx
இடைக்கால பங்குலாபம் சாதாரணம்				(xxx)	(xxx)
31.03.2016 இல் மீதி	xxx	xxx	xxx	xxx	xxx

வரையறுத்த விநாயகர் கம்பனி 31.03.2016இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று.

விபரம்	குறிப்பு	தொகை	தொகை
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
ஆதனம் பொறி மற்றும் உபகரணம்	04		xxx
நடைமுறை சொத்துக்கள்			
இறுதிச் சரக்கிருப்பு		xxx	
வியாபார வருமதிகள்		xxx	
முற்பண தொலைபேசிக்கட்டணம்		xxx	
வருமதி வாடகை		xxx	
காசுக்கு சமனானவையும்		Xxx .	Xxx .
			xxx
உரிமையாண்மையும் பொறுப்புக்களும்			
கூறப்பட்ட பங்கு மூலதனம்			
- சாதாரண பங்குகள்			xxx
ஒதுக்கங்கள்			
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்		xxx	
பொது ஒதுக்கம்		xxx	
நிறுத்தி வைத்த வருவாய்		Xxx .	xxx .
			xxxx .

நடைமுறை அல்லாத பொறுப்பு			
தொகுதிக்கடன்		XXX	
வங்கிக்கடன்		XXX	
குத்தகைக்கடன் கொடுத்தோர்		XXX .	XXX
நடைமுறைப் பொறுப்புக்கள்			
குத்தகைக்கடன் கொடுத்தோர்		XXX	
வியாபாரக்கடன் கொடுத்தோர்		XXX	
ஊழியர் சேமலாப நிதி செல்மதி		XXX	
ஊழியர் நம்பிக்கை நிதி செல்மதி		XXX	
வருமான வரி ஏற்பாடு		XXX	
செல்மதி வற்வரி		XXX	
செல்மதி மின்சாரம்		XXX	
முற்பணமாய் பெற்ற தரகு		XXX	
விற்பனை உத்தரவாத ஏற்பாடு		XXX .	XXX .
			XXXX

குறிப்பு—05

காசும் காசுக்கு சமனானவையும்

திறைசேரி உண்டியல்கள் XXX

வங்கி மீதி XXX

காசு மீதி XXX

குறிப்பு — 06

இயக்குனர் சபை இவ்வருடத்திற்கான இறுதிப்பங்குலாபமாக ரூ. XXX இனை பிரேரித்துள்ளார்.

விபரம்	காணி, கட்டிடம்	இயந்திரம்	மோட்டார் வாகனம்	தளபாடம்	மொத்தம்
கிரயம்					
01.04.2015 இல் மீதி	xxx	xxx	xxx	xxx	xxx
கொள்வனவு		xxx		xxx	xxx
அகற்றல் (கிரயம்)				(xxx)	xxx
அகற்றல் (பெறுமானத் தேய்வு)			(xxx)		xxx
மீள்மதிப்பீடு	xxx		xxx		xxx
	xxx .	xxx .	xxx .	xxx .	xxx .
திரண்ட பெறுமானத்தேய்வு					
01.04.2016 இல் மீதி	xxx	xxx	xxx	xxx	xxx
ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு	xxx	xxx	xxx	xxx	xxx
அகற்றல் (பெறுமானத்தேய்வு)			(xxx)	(xxx)	xxx
	xxx .	xxx .	xxx .	xxx .	xxx .
31.03.2016இல் கொண்டு செல் தொகை	xxx .	xxx .	xxx .	xxx .	

காணி மற்றும் மோட்டார் வாகனம் முறையே ரூ XXX , ரூ XXX ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.